# மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான ஜெபம்

பிதாவே, நான் அதிசயத்தக்க வகையில் உருவாக்கப்பட்தற் காக நன்றி; ஏனென்றால் நீரே என்னை உண்டாக்கினீர். நீர் என்னில் அன்பாயிருப்பதற்காகவும், என்னை உம்முடைய சொந்தமென்று அழைப்பதற்காகவும் நன்றி. இயேசுவைப் பின்பற்றுகிற சிலாக்கியத்திற்காக நன்றி.

மேலாதிக்க உணர்வை விரும்பி, அதை ஊக்குவித்ததற்காக என்னை மன்னித்தருளும். அத்தகைய ஆசைகளை நான் முற்றிலும் புறக்கணித்து, நிராகரிக்கிறேன். மற்றவர்களைவிட மேலானவன் என்கிற உணர்வால் மகிழ்வதைப் புறக்கணிக் கிறேன். மற்ற எல்லாரையும்போல, நானும் ஒரு பாவி, நீர் இல் லாமல் நான் ஒன்றும் சாதிக்கமுடியாது என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

நான் மேலான ஒரு குழுவை அல்லது பின்னணியைச் சார்ந்த வன் என்கிற உணர்வுகளை வளர்ப்பதிலிருந்தும் மனந் திரும்பி, அதை நிராகரிக்கிறேன். உம்முடைய பார்வையில் அனைவரும் சமம் என்பதை அறிக்கையிடுகிறேன்.

பிறரை அவமதித்துப் பேசினதிலிருந்தும், மற்றவர்களைப் புறக் கணித்ததிலிருந்தும் இப்போது மனந்திரும்புகிறேன்; அந்த சகல வார்த்தைகளுக்காகவும் உம்மிடம் மன்னிப்பு வேண்டு கிறேன்.

மக்களை அவர்களுடைய இனம், அவர்களுடைய பாலினம், அவர்களுடைய செல்வம் அல்லது அவர்களுடைய கல்வி ஆகியவற்றை முன்னிட்டு இழிவாக நினைப்பதைப் புறக் கணிக்கிறேன்.

தேவனுடைய கிருபையால் மட்டுமே நான் உம்முடைய பிர சன்னத்தில் நிற்பதை ஒத்துக்கொள்கிறேன். மனிதர்கள் நியா யந்தீர்க்கிறபடி நான் இனி நியாயந்தீர்க்காமல், இரட்சிப்புக்காக உம்மை மட்டுமே நோக்கிப் பார்க்கிறேன்.

குறிப்பாக நீதிமான்கள் மேலானவர்கள், இஸ்லாத் மக்களை வெற்றியாளர்களாக மாற்றுகிறது, இஸ்லாமியர்கள் இஸ்லாமி யர் அல்லாதவர்களைவிட மேலானவர்கள் என்கிற இஸ்லாத் தின் கோரிக்கைகளை நிராகரிக்கிறேன்.

ஆண்கள் பெண்களைவிட மேலானவர்கள் என்கிற கோரிக் கையைப் புறக்கணித்து, நிராகரிக்கிறேன்.

பரலோகப் பிதாவே, மேலாதிக்கம்குறித்த ஒவ்வொரு தவ றான கருத்திலிருந்தும் விலகி, உம்மையே சேவிக்கத் தெரிந்துகொள்கிறேன்.

ஆண்டவரே, மற்றவர்களின் வெற்றியில் களிகூரவும் தெரிந்து கொள்கிறேன். மற்றவர்கள் மேலான சகலவித பொறாமை களைப் புறக்கணித்து, நிராகரிக்கிறேன்.

ஆண்டவரே, நான் உமக்குள் எப்படிப்பட்டவன் என்பதை சரியாகவும், ஆழமாகவும் நிதானிக்க உதவும். நீர் என்னை எவ்வாறு பார்க்கிறீர் என்கிற சத்தியத்தைப் போதித்தருளும். நீர் என்னை எதற்காக உருவாக்கினீரோ அதில் நான் திருப்தி யடைய உதவிசெய்யும்.